| O.S.No. 182/2019 | DW1: திரு. ராஜி (எ) குருசாமி<br>த/பெ. திரு. நரசிம்ம நாயுடு | 06-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் தற்சமயம் காஞ்சிபுரத்தில் வசிக்கிறேன். நான் ITI படித்துள்ளேன். வியாபாரம் செய்கிறேன். காஞ்சிபுரத்தில் 1999-ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். அதற்கு முன்பாக மாளிகைப்பட்டு கிராமத்தில் வசித்து வந்தேன். மாளிகைப்பட்டு கிராமத்தில் உள்ள அக்கப்ப நாயுடு எனக்கு சின்ன தாத்தா உறவு முறை ஆவார். அக்கப்ப நாயுடுவுக்கு உடன்பிறந்தவர்கள் ஒரு அண்ணன், ஒரு அக்கா, இரண்டு தங்கைகள் ஆவார்கள். அக்கப்ப நாயுடுவின் மூத்த சகோதரர் பெயர் குருசாமி நாயுடு.

2. குடும்ப சொத்து குறித்து 1958-ல் அக்கப்ப நாயுடுவுக்கும் குருசாமி நாயுடுவின் குமாரர்கள் சீனிவாச நாயுடு, நரசிம்மலு நாயுடு, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது. குருசாமி நாயுடு இறந்துவிட்டதால் அவருடைய குமாரர்கள் மூவரும் சேர்ந்து அக்கப்ப நாயுடுவுடன் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் குருசாமி நாயுடு வாரிசுகளுக்க A ஷெட்யூல் சொத்தும், அக்கப்ப நாயுடுவுக்கு B ஷெட்யூல் சொத்தும் பாகமாக வந்தது. அந்த பாகப்பிரிவினைப்படி B ஷெட்யூல் சொத்தினை அக்கப்ப நாயுடுவும், A ஷெட்யூல் சொத்தினை குருசாமி நாயுடுவின் வாரிசுகளும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. நான் குருசாமி நாயுடுவின் குமாரரான நரசிம்ம நாயுடுவின் மகன் என்று சொன்னால் சரிதான். குருசாமி நாயுடுவின் வாரிசுகள் அவர்களுக்கிடையே பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். அக்கப்ப நாயுடுவிற்கு ஆண் வாரிசுகள் இல்லை, இரண்டு பெண்கள்தான் வாரிசுகள். அக்கப்ப

நாயுடுவின் மகள்கள் பெயர் சரோஜினி மற்றும் சகுந்தலா ஆகும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை படித்து பார்த்தேன். 1-வது அயிட்ட சொத்தான சர்வே எண். 11/2A அக்கப்பநாயுடுவுக்கு பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான்.

4. அக்கப்ப நாயுடு தாவா 1-வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதிக்கு அவரது சகோதரர் ராமமூர்த்திக்கும் 20.08.1993-ல் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அது அவர் விருப்பப்பட்டு எழுதவில்லை. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை வாங்கி பார்த்தேன். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதி அக்கப்ப நாயுடுவை அடித்து துன்புறுத்தி எழுதி வாங்கிக்கொண்டார். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கையெழுத்து அக்கப்ப நாயுடுவின் கையெழுத்துதான். அக்கப்ப நாயுடு 1997-ம் ஆண்டு இறந்துவிட்டார். அக்கப்ப நாயுடு உயிருடன் இருந்த வரை வாதி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை அடித்து துன்புறுத்தி எழுதி வாங்கிக்கொண்டார் என்று நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்றால் இல்லை.

5. தாவா 2-வது அயிட்ட சொத்தான சர்வே எண். 11/1, சர்வே எண். 11/2B ஆகிய சொத்துக்கள் 26.12.1995-ல் அக்கப்ப நாயுடு வாதி செல்வராஜ் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அந்த பத்திரமும் அக்கப்ப நாயுடுவை அடித்து துன்புறுத்தி வற்புறுத்தி எழுதி வாங்கிய பத்திரம் ஆகும். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் அக்கப்ப நாயுடுவின் கையெழுத்துதான். 2-வது அயிட்ட சொத்து சம்மந்தமாக அக்கப்ப நாயுடு உயிருடன் இருந்த வரை வாதி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை அடித்து துன்புறுத்தி எழுதி

வாங்கிக்கொண்டார் என்று நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்றால் இல்லை.

6. அக்கப்ப நாயுடுவின் மூத்த மகள் சரோஜினி அம்மாளுக்கு மொத்தம் 6 பிள்ளைகள் வாரிசுகள் ஆவார்கள். அவர்களது பெயர் தமிழரசி, தில்லைக்கரசி, காசியப்பன், எழிலரசி, இளங்கோவன், சாந்தி ஆகும். அக்கப்ப நாயுடுவின் 2-வது மகள் சகுந்தலாவிற்கு மொத்தம் 4 பிள்ளைகள், அவர்கள் பெயர் ராமமூர்த்தி, ஞானாம்பாள், செல்வராஜ், பண்டிட் விஜயலட்சுமி ஆகும். அக்கப்ப நாயுடு சகுந்தலா அம்மாள் வாரிசுகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததுபோல் மூத்த மகளான சரோஜனி அம்மாளின் வாரிசுகளுக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. நான் ஏற்கனவே அ.வ. எண். 43/2021 என்ற வழக்கினை செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கினை வாதி செல்வராஜ் மற்றும் விஜயலட்சுமி பண்டிட் ஆகியோரது பெயரில் போட்டேன். அகத்தேரிப்பட்டு கிராமத்தில் உள்ள சொத்தினை நான் சரோஜினி அம்மாளிடமிருந்து கிரையம வாங்கினேன், அந்த சொத்து சம்மந்தமாகத்தான் அ.வ.எண். 43/2021 வழக்கினை தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் காட்டப்பட்ட சொத்தான சர்வே எண். 8/1A முதல் சர்வே எண். 8/1D, சர்வே எண். 8/2D மற்றும் சர்வே எண். 8/3 ஆகிய சொத்துக்களை இந்த வழக்கிலும் 3-வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. தாவா 3-வது அயிட்ட சொத்தில் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்குத்தான் நான் இந்த வழக்கில் எதிர் வியாஜ்ஜியம் செய்கிறேன் என்றால் சரிதான், மற்ற சொத்துக்களைப் பொறுத்து எதிர்

வியாஜ்ஜியம் செய்யவில்லை. சர்வே எண். 8/1A முதல் சர்வே எண்.8/1D , சர்வே எண். 8/2D மற்றும் சர்வே எண். 8/3 ஆகிய சொத்துக்கள் அக்கப்ப நாயுடுவின் மனைவி ஜெகதாம்பாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் அனைத்தும் ஜெகதாம்பாள் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

9. ஜெகதாம்பாள் 1977-ம் ஆண்டு இறந்துவிட்டார். ஜெகதாம்பாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார். ஜெகதாம்பாளின் வாரிசுகள்தான் அக்கப்ப நாயுடு, அவரது மகள்கள் சரோஜினி மற்றும் சகுந்தலா ஆகும். ஜெகதாம்பாள் விட்டுச்சென்ற சொத்துக்கள் அவரின் வாரிசுகளை சென்றடையும் என்றால் சரிதான். அதன்படிக்கு ஜெகதாம்பாளின் சொத்துக்கள் அக்கப்ப நாயுடு, சரோஜினி மற்றும் சகுந்தலாவிற்கு தலா 3-ல் 1 பாகம் உரிமை என்று சொன்னால் சரிதான்.

10. மேற்படி சொத்தினை சரோஜினியம்மாள் எனக்கு கிரையம் கொடுத்த கிரையப்பத்திரத்தில் 3-ல் 1 பாகம் என்று குறிப்பிடாமல் பாதி பாகம் என்று குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அதனால், சரோஜினியம்மாள் 3-ல் 1 பாகம் கிரையம் கொடுப்பதற்குத்தான் அவருக்கு உரிமை உள்ளது என்றாலும், எனக்கு பாதி பாகத்தினை கிரையம் கொடுத்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா 3-வது அயிட்ட சொத்தினை அக்கப்ப நாயுடு ஜெகதாம்பாளுக்கு எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டதால் அந்த சொத்துக்களில் சரோஜினியம்மாள் மற்றும் சகுந்தலா அம்மாளுக்கு தலா பேர்பாதி பாகம் உரிமையுள்ளது என்று சொல்லி சரோஜினியம்மாள் எனக்கு அவரது பாதி பாகத்தினை கிரையம் செய்து கொடுத்தார்.

11. 3-வது அயிட்ட சொத்து சம்மந்தமாக அக்கப்ப நாயுடு ஏதேனும் ஆவணம் எழுதி வைத்தாரா என்று வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்கத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அக்கப்ப நாயுடு அவரது மகள்களின் வாரிசுகளுக்க எழுதி வைத்த சொத்துக்கள் போக இதர சொத்துக்களைப் பொறுத்து ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார் என்று சொன்னால் அவ்வாறு எழுதி வைக்கவில்லை, அந்த உயில் சாசனமானது வாதியால் உருவாக்கப்பட்டதாகும். என்னுடைய எதிர்வழக்குரையிலும் அக்கப்ப நாயுடு எந்தவொரு உயில் சாசனமும் எழுதி வைக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12. நான் 2014-ம் ஆண்டு தாவா 3-வது அயிட்ட சொத்தில் பாதி பாகத்தினை கிரையம் வாங்கினேன். பி.சா.ஆ.32 ஆவணத்தில் சொத்தானது சரோஜினியம்மாளுக்கு பட்டா எண். 5-ன் மூலம் கிடைக்கப்பெற்றதாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். நான் அக்கப்ப நாயுடு 29.12.1996-ல் ஒரு உயில் எழுதி வைத்ததாக பி.சா.ஆ.13 உயில் சாசனத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் அக்கப்ப நாயுடு எழுதி வைத்த உயில் சாசனம்தான் என்றால் இல்லை. பி.சா.ஆ.13 உயில் சாசனத்தில் உள்ள கையெழுத்து அக்கப்ப நாயுடுவின் கையெழுத்து என்றால் இல்லை. பி.சா.ஆ.33 உயில் சாசனத்தை எதற்காக தாக்க்ல செய்துள்ளீர்கள் என்றால் 1994-ல் சொத்தினை விற்பனை செய்தார்கள் என்பதனை ஊர்ஜிதப்படுத்துவதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

13. நான் ஏற்கனவே அ.வ.எண். 43/2021 வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் அளித்த சாட்சியத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.06 13:23:51 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**